அ.வ.எண். 56/2020 நாள்: 05.02.2026

வா.சா.1 திருமதி.விஜயலெட்சுமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4) வழக்கு சொத்தை எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 2009–ல் வாங்கினேன், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எந்த தேதியில் பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்தேன் என்றால் கிரையம் பதிவு செய்தபிறகு 2, 3 மாதங்கள் கழித்து மனு கொடுத்தேன். வழக்கு சொத்தை அளப்பதற்கு எப்போது மனு கொடுத்தேன் என்றால் 2020–ல் மனு கொடுத்தேன். வழக்கு சொத்தை அளந்து காட்டினார்களா என்றால் இல்லை, அளவீடு செய்ய வரும்போது எதிர்தரப்பினர் அளவீடு செய்யவிடவில்லை. எவ்வாறு தடுத்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் நிலஅளவை செய்யவருவதற்கு முன்பு எதிர்தரப்பினருக்கு தகவல் கொடுக்க சொன்னார் அதன்படி தகவல் கொடுத்தேன், அளக்க கூடாது என்று கூறவிட்டார்கள்.

5) அவ்வாறு அளக்க கூடாது என்று கூறிய தேதி தெரியுமா என்றால் பணம் கட்டிய தேதியிலிருந்து ஒரு வாரம் கழித்து கூறினார். அளக்க கூடாது என எழுத்துபூர்வமாக கொடுத்தார்களா என்றால் இல்லை, வாய்மொழியாகதான் சொன்னார்கள். அளக்க கூடாது என தடுத்ததற்கு காரணம் கூறினார்களா என்றால் மாமரம் இருந்த இடம் அவர்கள் இடம் என்றும், அதனால் அளக்க கூடாது என்றும் சொன்னார். அவரது இடம் என்று கூறியதற்கு ஆவணம் உள்ளதா என்று கேட்டேனா என்றால் ஆமாம், அவ்வாறு நான் கேட்டதற்கு ஆவணம் காட்டினார்களா என்றால் ஆவணம் என்னிடம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றும் எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறினார்.

6) வழக்கு சொத்து எந்தெந்த சர்வே நம்பரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும், புல எண்.56/4A, புல எண்.57 மற்ற சர்வே நம்பர்கள் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்களில் எந்த சர்வே நம்பரில் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்று கூறினாரா அல்லது மொத்த சொத்திலும் உரிமை உள்ளது என்று கூறினாரா என்றால், எந்த சர்வே நம்பரில் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை, பொதுவாக பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்று கூறினார். எந்த சர்வே நம்பரில் பிரதிவாதி உரிமை கோருகிறார் என்று நான் கேட்டேனா என்றால் பஞ்சாயத்து தலைவர் கேட்டார், அதற்கு மாமரம் இருந்த இடம் உரிமை உள்ளது

என்று பிரதிவாதி சொன்னார். அந்த மாமரம் தற்போது உள்ளதா என்றால் நான் கிரையம் பெறும்போதே அப்படி ஒரு மாமரம் இல்லை.

7) நான் சொன்ன பஞ்சாயத்து எப்போது நடந்தது என்றால் சர்வேயர் நிலஅளவை செய்ய வந்தபோது பஞ்சாயத்து நடந்தது. யார் யார் மேற்படி பஞ்சாயத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் வேணுகோபால், உதயன், ராதா, குமரவேல் மற்றும் சிலர். யார் சொன்னதின் பேரில் பஞ்சாயத்து நடந்தது என்றால் நான்தான் சொன்னேன். பஞ்சாயத்து கூட்டும் வரை நிலஅளவையர் அங்கு இருந்தாரா என்றால் இல்லை. மறுபடியும் நிலஅளவையர் வந்தாரா என்றால் 2 மாதங்களில் 4, 5 முறை பஞ்சாயத்து நடந்தது, நிலஅளவையர் மறுபடியும் வரவில்லை. மேற்படி பஞ்சாயத்து நடந்த விவரம் குறித்து வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் ஆமாம்.

8) வழக்கு சொத்தில் பிரச்சனையிருப்பது தெரிந்து லெட்சுமிபதியிடம் கேட்டேனா என்றால் ஆமாம். அதற்கு என்ன கூறினார் என்றால் எங்கு கூப்பிட்டாலும் சொல்கிறேன் என்று சொன்னார். சாட்சி பட்டியிலில் லெட்சுமிபதி பெயரை குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரியவில்லை. மேற்படி பிரச்சனை வந்தபிறகாவது நான் வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் 50 வருடங்களுக்கு வில்லங்கம் பார்த்தேன். வா.சா.ஆ.2 வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜம்மாள் என்பவர் லெட்சுமிபதியின் தாயார் என்றால் சரிதான். ராஜம்மாள் பெயரிலிருந்து லெட்சுமிபதிக்கு சொத்து எப்படி வந்தது என்று அதே வில்லங்க சான்றிதழில் கூறப்படவில்லை என்றால் சரிதான்.

9) ராஜம்மாளுக்கு வாரிசுகள் எத்தனை பேர் என்று தெரியுமா என்றால் தெரியும். மொத்தம் 6 பேர், அவர்களின் பெயர் 1.லெட்சுமிபதி, 2.விட்டல்தாஸ், 3.தீனதயாளன், 4.பாபு மற்றும் 2 பெண்கள் அவர்கள் பெயர் ஞாபகம் இல்லை. ராஜம்மாளின் இறப்பு சான்றிதழ் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, ராஜம்மாளின் இறுதி சடங்கில் நான் கலந்துள்ளேன். மேற்படி ராஜம்மாளின் வாரிசு சான்று கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

10) ராஜம்மாளின் வாரிசுகள் லெட்சுமிபதிக்கு பவர் பத்திரம் கொடுத்துள்ளதை பார்த்துள்ளேனா என்றால் ஆமாம், அதை என்னிடம் கொடுத்தார்கள். மேற்படி பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் பவர்

பத்திரம், வாரிசு சான்று விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்குரிய மூலபத்திரம் என் வசம் கொடுத்துள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். எனது வழக்குரையில் பிரதிவாதி என்னை மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் எந்த தேதியில் அவ்வாறு மிரட்டினார் என்றால் தேதி தெரியாது, அளக்க வந்தபிறகு ஒரு வாரம் கழித்து மிரட்டினார்.

11) பிரதிவாதி மிரட்டியதாக சொல்வதற்கு காவல்நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் என்ன சாகுபடி செய்து வருகிறேன் என்றால் நெல் சாகுபடி செய்கிறேன். எத்தனை வருடமாக சாகுபடி செய்கிறேன் என்றால் கிரையம் வாங்கியதிலிருந்து செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 அடங்கலில் என்ன சாகுபடி செய்கிறேன் என்றும், யார் சாகுபடி செய்கிறார் என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 2009 முதல் 2020 வரை பிரதிவாதி என்னை மிரட்டவில்லை என்றால் சரியல்ல, வருடந்தோறும் முள்வேலி நான்தான் அமைப்பேன் அவ்வாறு முள்வேலி அடைக்கும் முன்பு நீங்கள் அடைகிறீர்களா அல்லது நான் அடைக்கட்டுமா என்று கேட்பேன் என்னையே அடைத்துக் கொள்ளுமாறு சொல்வார், ஆனால் 2020–ல் அவ்வாறு முள்வேலி அடைக்கும்போது பிரச்சனை வந்தது அப்போதுதான் பிரதிவாதி மிரட்டினார்.

12) எனது நிலத்திற்கு அருகில் உள்ளவர்கள் என்னென்ன சாகுபடி செய்கிறார்கள் என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக சாகுபடி செய்வார்கள். பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் பங்கு உள்ளது என்று தெரிந்தே கிரையம் வாங்கினேனா என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என்று சொன்னார். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Vijayalakshmi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.05 17:12:02 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU